## திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை !



திருச்சி, ஜூலை 13-

திருச்சி மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் (13.07.2025 - ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வருகை தந்து தெற்கு மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தர உள்ளார்கள். அவரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருச்சி விமான நிலையத்தில் வரவேற்க உள்ளோம்.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,பகுதி,ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளைச் சேர்ந்த அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக

# ஆளுமைமிக்க ஆட்சியை நடத்துகிறார் நம் முதல்வர்!

### பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் வி. செந்தில்பாலாஜி பேச்சு!



கரூர், ஜூலை 13-

கழகத் தலைவர், முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, "தமிழ்நாட்டின் மண்- மொழி, மானம், காக்க, ஓரணியில் தமிழ்நாடு" எனும் திமுக உறுப்பினர் சேர்க்க முன்னெடுப்பு மாபெரும் பிரச்சார பொதுக்கூட்டம் கரூர் உழவர் சந்தை அருகில் நடைபெற்றது. மாவட்ட கழக அவை தலைவர் டி .ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாநகரச் செயலாளர் எஸ்பி.கனகராஜ் வரவேற்புரையாற்றினார்.

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரை யாற்றினார் அவர் பேசியதாவது:-

பிஜேபி அரசு தமிழ்நாட்டிற்கு வளர்ச்சி திட்டங்களைத் தர மறுக்கின்றது. பிரதமர் தமிழ்நாட்டுக்கு வருகின்ற பொழுதெல்லாம் ஆங்கிலத்தில் பேசுகிறார் என்று இங்கு இருக்கக்கூடிய நிர்வாகிகள் கூற, ஆனால் சமூக வலைதளத்தில் மேலே அவர்கள் சொன்ன கருத்துக்களையும், கீழே மோடி இந்தியிலே பேசுவதையும் எடுத்து போட்டு அதற்கு விளக்கம் சொல்ல முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றார்கள் . பிரதமராக இருந்தாலும் சரி நிதி அமைச்சராக இருந்தாலும் சரி, இரண்டு வரியில் திருக்குறளை சொல்லிவிட்டு தமிழ் மீது பற்று கொண்டு இருக்கிறோம் என மக்களை ஏமாற்ற நினைக்கின்றார்கள். ஒரு போதும் தமிழ்நாட்டு மக்களை மோடியால் அந்த கட்சியால் ஏமாற்றி விட முடியாது. அப்படி ஒரு சூழல் எந்த காலத்திலும் வரவே வராது. காரணம்

பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் சிந்தனைகளை, முத்தமிழ் அறிஞர் கலைஞரின் எண்ணங்களை ஒருசேர வழி நடத்தி திட்டங்களாக மாற்றி தமிழ்நாட்டினுடைய மக்களை வழிநடத்தி செல்லுகின்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இந்தியாவில் எத்தனை முதலமைச்சர்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் அந்த முதல்வர்களுக்கு எல்லாம் முதல்வராக நெஞ்சுரத்தோடு ஒரு ஆளுமை மிக்க ஆட்சியை நடத்துகின்ற முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

பிஜேபி ஆளக்கூடிய மாநிலங்களில் வேண்டுமென்றால் கட்டாயத்தை ஏற்படுத்துகின்றனர். எதுவுமே செய்யாமல் கரூருக்கு எந்த வளர்ச்சி திட்டங்களையும் கேட்டு பெற்று செய்ய முடியாத திராணியில்லாத ஒருவர் ஏதோ திட்டங்கள் எல்லாம் அவர்களால் வந்ததைப் போல ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க முயற்சிக்கின்றார்கள்.

ரூ. 40 கோடியில் கரூருக்கு புதிய பேருந்து நிலையத்திற்கான நிதிகளை கொடுத்து துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் நீதிமன்றத்திற்கு சென்று தடையாணை பெற்றது இவர்கள்தான். அங்கே வாதாடி தடைகளை உடைத்து பேருந்து நிலையம் வந்துள்ளது. நம்முடைய திருவள்ளுவர் விளையாட்டு மைதானம் ராஜலிங்கம் மன்றம் வெறும் செட்டு ஆக இருந்த அந்த இடத்தில் ஏழு கோடி ரூபாய் நிதி ஒதுக்கி போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு புதிய நூலக கட்டடம் கட்ட முயன்றால் அதற்கும் தடை வாங்கினார்கள். சட்டப் போராட்டம் நடத்தி வென்று இப்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இவர்களாக எதுவும் செய்ய மாட்டார்கள். செய்பவர்களையும் செய்ய விட மாட்டார்கள்.

கரூர் காமராஜ் மார்க்கெட் புதிதாக அமைக்க வேண்டும் என்பது 30 ஆண்டு கால கனவு. அதையும் நிறைவேற்றி துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அறிவியல் பூங்கா பழைய மாவட்ட காவல் அலுவலகம் எதிரே உழைக்கின்ற மகளிர் தங்குவதற்கு குறைந்த கட்டணத்தில் மகளிர் தோழி விடுதிகரூர், திருச்சி மாவட்டத்திற்கு மக்கள் எளிதில் சென்று வர நெரூர் பகுதியில் காவிரி ஆற்றில் புதிய பாலம் இவைகள் அனைத்தும் கோரிக்கையாகவே இருந்தவை. கழக ஆட்சியில் தான் நிறைவேற்றப்படுகின்றன. ஏற்கனவே இருந்தவர்கள் மேடையிலேயே பேசுவார்களே தவிர யாராலும் நிறைவேற்ற முடியவில்லை.

கரூர் கோவை 4வழிச் சாலை என்று கூறி நாடாளுமன்றத் தேர்தல் வரும் போதெல்லாம் புகைப் படங்களை மட்டுமே வெளியிட்டார்கள். லென்ஸ்களை வைத்து போட்டோ எடுத்து பத்திரிகைகள் எல்லாம் வெளியிட செய்தனர். ஒரு வேலையும் செய்யவில்லை. ஆனால்

கழக ஆட்சியில் ஏறத்தாழ 134 கோடி ரூபாய் கொடுத்து கரூர் கோவை நான்கு வழி சாலையாக மாற்றி இப்ப நம்ம கோயம் புத்தூர் போனா எளிதில் போகலாம் என்ற அளவுக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 40 கோடியில் குளித்தலையில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டிடம் கூடுதலாக ரூ.10 கோடி நிதி வழங்கப்பட்டு இருக்கிறது. தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டிடம்திறப்பு இணைக்கப்பட்ட சணப்பிரட்டி பகுதிக்கு கூடுதல் புதிய குடிநீர் திட்டம்பாதாள சாக்கடை பணிகள் என கரூர் மாநகராட்சிக்கு மட்டும் ரூ.328 கோடியில் கட்டமைப்பு பணிகள் அரவக்குறிச்சியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிஅரவக்குறிச்சியில் முருங்கை உற்பத்தி பூங்காகிருஷ்ணராயபுரத்தில் வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் சிப்காட்கரூரில் புதிய ஐடி பார்க் அமைக்க இடம் தேர்வு இப்படி திட்டங்களை சொல்லிக் கண்டே போகலாம். இவற்றையெல்லாம் மக்களிடம் எடுத்துச் சென்று உறுப்பினர் சேர்க்கை பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தலைமை கழக பேச்சாளர் ஆரூர் மணிவண்ணன், எம்எல்ஏக்கள் பிஆர். இளங்கோ, க.சிவகமசுந்தரி, இரா. மாணிக்கம், மாநில நிர்வாகிகள் நன்னியூர் ராஜேந்திரன், என்.மணிராஜ், பரணி கே.மணி, கரூர் முரளி, முனவர் ஜான், வே.பல்லவி ராஜா, பி.விஜயகுமார், மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், கரூர் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் எம்எஸ்கே கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என். செல்வராஜ், பகுதி கழக செயலாளர்கள் கரூர் கணேசன், க. சுப்பிரமணியன், கோல்ட் ஸ்பாட் ஆர்எஸ். ராஜா, ஆர்.ஜோதிபாசு, விஜிஎஸ்.குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் இ. ராமர், எம்எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம்.ரகுநாதன், ஜி.அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவிராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ்.சுதாகர், என் மணிகண்டன், த. கார்த்திக், சி.வளர்மதி, பி முத்துக் குமாரசாமி, வி.கே.வேலுச்சாமி, எல்.கரிகாலன், ப. தியாகராஜன், சி.கதிரவன், புகலூர் நகர செயலாளர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகர பொறுப்பா ளர் வாஷிம் ராஜா,

பொதுக்குழு உறுப்பினர்கள் என்எஸ்.ஆறுமுகம், வி .கருப்பண்ணன், விகேடி. ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே சாமிநாதன், சி.கருப்பையா, பிபி சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ் காளியப்பன், எம்.சிவசாமி, ஏ. நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாம சுந்தரி, கலாவதி சக்திவேல், பிஏ.குமார், பேரூர் செயலாளர்கள் கே.அம்மையப்பன், கே. முரளிராஜா, இ.ரவீந்திரன், ஆர்.மோகன்ராஜ், எம். சசிகுமார், எம்.முத்து, சி.தங்கராஜ், பிஎஸ்.மணி,

அணி அமைப்பாளர்கள் ஆர்ஜி சரவணமூர்த்தி, ஜிம் சிவா, நந்தினி தேவி, தாசப் பிரகாஷ், ஏ. சுப்பிரமணியன், தென்னிலை பாலு, பி.சங்கர், அருணா பொன்னுசாமி, வி.அருண், பி. மோகனசுப்பு, பழ.அப்பாசாமி, எம்.பிரின்சி, சி. நவாஸ் கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு.வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லசாமி, எஸ்.மனோகர், எம்ஆர்எஸ் சுரேஷ், பங்க் சுப்பிரமணி, விஆர் அண்ணா வேலு, வழக்கறிஞர் என். செந்தில் குமார், டிஎம்.பஷீர்அகமது, முன்னாள் எம்எல்ஏக்கள் பி.காமராஜ், எஸ். காமராஜ், மற்றும் இரா.பிரபு, ஆர். ராமசாமி, ஆர்.கந்தசாமி, கா. அன்பரசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கனகராஜ், ராஜா, பாபு, அருண், யுவராஜ், வழக்கறிஞர்கள் இரா. குடியரசு, பிலட்சுமணன், டி. ராஜேஸ்வரி, மாநகர கழக நிர்வாகிகள் கேவி.தங்கவேல், எம். பாண்டியன், கேஎஸ்.அறிவின்ஸ், எம்நிஷா, அங்கு நா.பசுபதி,ஆர்.வெங்கடேஷ், கே.எம்.பாலகிருஷ்ணன், பி.சண்முகம், கேஆர்.சுந்தர் ராஜன் ஏ.ஆரோக்கிய ஜெயபால், பி.பழனிவேல், ஜி.ஜீவரத்தினம், பி. சுப்பிரமணி, அக.இளமுருகு மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். மத்திய பகுதி பொறுப்பாளர் விஜி எஸ். குமார் நன்றியுரை கூறினார். கரூர் மாவட்ட திமுக சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



அரியலூர் மத்திய ஒன்றிய கழகத்தின் சார்பில், ரெங்கசமுத்திரம் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பரப்புரையை மேற்கொண்டார்கள்."ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பு என்பது திமுகவுக்கான உறுப்பினர் சேர்க்கைக்காக மட்டுமல்ல; தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க அனைவரையும் ஓரணியில் திரட்டுவதற்கான முயற்சி! உடன் அரியலூர் சட்டமன்றத் தொகுதி மேலிட பார்வையாளர் ப.அன்பரசு,அரியலூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் தெய்வ.இளையராஜா, பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் வை.முருகானந்தம், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ராஜ்குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## கலைஞரின் "செல்லப்பிள்ளை" கலையின் கலை !

# திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை!

திருவாரூரில் மாவட்ட திமுக சார்பில் அமைக்கப்பட்ட மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எழில்மிகு சிலை, தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 10.07.2025 அன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கள ஆய்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல், சிலை திறப்புவிழா உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு திருவாரூர் வந்த கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்ற 5 கிலோமீட்டர் தூர ரோட்ஷோ நிகழ்வில், லட்சக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று இனம், மொழி, மண், மானம் காத்த தங்கள் தலைவருக்கு உற்சாக வரவேற்பளித்தனர். ரோட்ஷோவின் முடிவில் திருவாரூர் ரயில்வே மேம்பாலம் அருகே அமைக்கப்பட்டிருந்த கலைஞர் சிலைக்கு எதிரேயும், தமிழினத்தின் விடியலுக்காக 92 ஆண்டுகாலம் வாழ்ந்து மறைந்தாலும், மறைந்தும் வாழும் தங்கள் தலைவரின் சிலை திறப்பைக்காண பல்லாயிரக்கணக்கில் மக்கள் மாலை 6 மணிமுதலே காத்திருந்து கண்டு மகிழ்ந்தனர்.




திருவாரூரில் கலைஞர் என்ற அந்த சகாப்தத்தின் சிலை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் , பூமியிலிருந்து சுமார் 42அடி உயரத்தில் எழுப்பப்பட்ட பிரமாண்ட தூண்களில், 15 க்கு15 இடப்பரப்பில் எழில்மிகு தோற்றத்தில் அமைந்துள்ளது. இந்த சிலை அமைப்பு பணிகள் துவங்கப்பட்ட முதல் மணித்துளி முதல் , கலைஞர் எனும் மாமனிதரின் சிலை அமைக்கும் பணியானது முடிவுற்று திறப்பு விழா கண்டவரை, மாவட்டக் கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் என்கிற அர்ப்பணிப்பு உணர்வுகொண்ட, "கலைஞரின் செல்லப் பிள்ளை" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அழைக்கப்பட்ட பூண்டி.கே.கலைவாணன் அவர்களால், ஒவ்வொரு நாளும் அவரது மேற்பார்வையுடனும் , அவரது ஆலோசனைகளின்படியும் நடைபெற்றது.

திறப்புவிழாவின்போது சிலையின் அமைப்பை ரசித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அடுத்தநாள் விழாவில் பேசும்போது பூண்டி கலைவாணன் அவர்களை "நேற்றும் இன்றும் திருவாரூரை திருவிழா வாக்கி என்மனதை இனிக்க வைத்திருக்கிறார்,கலைஞர் அவர்களின் செல்லப்பிள்ளையாக இருந்து எந்த பொறுப்பை வழங்கினாலும் பணி முடிப்பவர் என்று பாராட்டியதே அதற்கு சான்று!

பூமியில் இருந்து சுமார் 42அடி உயரத்தில் மண்டபம் , அதனுள்ளே திருவாரூரை மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்நாட்டை செதுக்கிய நவீன சிற்பி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 9 அடி சிலை! மண்டபத்தின் மேற்புறம் 61/2அடி உயர கலை வேலைப்பாடுகளின் கூடிய "டூம்" அமைப்பு. அதற்கும் மேலே 3 அடி உயரத்தில் வட்ட வடிவிலான அடுக்கு .

பி. ஜாகீர் உசேன்
முரசொலி செய்தியாளர்
திருவாரூர் மாவட்டம்



அதற்கு மேலே பெரியார், அண்ணா போன்ற திராவிடப்பல்கலைக் கழகங்களில் படித்து பகுத்தறிவு பாதையில் சென்றாலும், திருவாரூரில் ஓடாமல் கிடந்த தேரை ஓடவைத்ததுமட்டுமல்லாமல் , திருவாரூரை உலகறிய செய்து மக்களின் மனதில் நிறைந்திருக்கும் பெருமைக்குரிய மாமனிதரின் சிலையை மேலும் அழகூட்ட அற்புத கலசம் ! மண்டப முகப்பில் கலைஞரின் கைகளால் எழுதப்பட்ட "தமிழ் வெல்லும்" என்கிற கையெழுத்துடன் கூடிய வார்த்தைகள் ! அதற்கும் மேலே பட்டொளி வீசி பறக்கும் கழகத்தின் கருப்பு சிவப்பு கொடிக்கம்பம்!

இப்படி ஒவ்வொரு அமைப்பிலும் நமது அன்புத் தலைவரின் சிலையையும் அதன் மண்டப வேலைப்பாடுகளையும் மக்களின் எண்ணங்களை கவரும் வண்ணமாக மிக நுணுக்கமாக பார்த்து பார்த்து வடிவமைத்திருக்கிறார் "கலை" என்கிற காந்தக்குரலால் கலைஞர் அவர்களால் அன்போடு அழைக்கப்பட்ட மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் அவர்கள்! பாலம் உயர்த்தப்பட்டாலும், சாலைகள் உயர்த்தப்பட்டாலும் கலைஞர் அவர்களின் சிலை மறைக்கப்படாத அளவுக்கு தொலைநோக்கோடு அமைக்கப்பட்டிருப்பது மேலும் சிறப்பு !

கடந்த நூற்றண்டின் தலைப்பு செய்தியாக, ஊடகங்களின் பேசுபொருளாக, அரசியலின், கலையின், ,இலக்கியங்களின் கருப்பொருளாக விளங்கிய வாழ்நாள் போராளி கலைஞர். தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்ற காவியத்தின் சிலைதான் தற்போதைக்கும் ஒட்டுமொத்த திருவாரூர் மாவட்ட மக்களின் பேசுபொருள்!

சிலை திறந்து வைக்கப்பட்ட அடுத்த நொடியிலிருந்தே அங்கே சாரை சாரையாய் வரும் மக்கள் கூட்டம் அந்த மாமனிதரின் சிலையை கைகூப்பி வணங்கி, மனமுருக தங்களுக்கு எல்லாம் தந்த கலைஞர் அவர்களுக்கும், அவர் வழியில் தந்து கொண்டிருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி சொல்லி சென்றுகொண்டிருப்பதை காண முடிகிறது.

2026 தேர்தலில் கழககூட்டணி மகா வெற்றியை பெற்று, 7 வது முறை கழகமும் ,2 வது முறை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் ஆட்சி அமைத்து, வெற்றி மாலை சூட வரும் நாளை கலைஞர்அவர்களின் சிலை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கிறது என அனைத்து தரப்பு மக்களும் தெரிவித்துவருகின்றனர்.!




கரூர் மாநகராட்சி சணப்பிரட்டியில் நகர நலவாழ்வு மையத்தை மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், எம்.எல்.ஏ. க.சிவகாமசுந்தரி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.